ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமொழி

# 4.9 – மரவடியை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 4.9 – மரவடியை

‡ மர அடியைத் தம்பிக்கு ⋆
வான் பணையம் வைத்துப் போய் வானோர் வாழ ⋆
செரு உடைய திசைக் கருமம் ⋆
திருத்தி வந்துலகாண்ட திருமால் கோயில் ⋆
திருவடி தன் திரு உருவும் ⋆
திருமங்கை மலர் கண்ணும் காட்டி நின்று ⋆
உரு உடைய மலர் நீலம் காற்றாட்ட ⋆
ஓ சலிக்கும் ஒளி அரங்கமே ‖ **4.9.1** ‖

‡ தன் அடியார் திறத்தகத்துத் ⋆
தாமரையாள் ஆகிலும் சிதகுரைக்குமேல் ⋆
என் அடியார் அது செய்யார் ⋆
செய்தாரேல் நன்று செய்தார் என்பர் போலும் ⋆
மன் உடைய விபீடணற்கா ⋆
மதிள் இலங்கைத் திசை நோக்கி மலர் கண் வைத்த ⋆
என்னுடைய திருவரங்கற்கன்றியும் ⋆
மற்றொருவர்க்காள் ஆவரே ‖ **4.9.2** ‖

கருள் உடைய பொழில் மருதும் ⋆
கதக் களிறும் பிலம்பனையும் கடிய மாவும் ⋆
உருள் உடைய சகடரையும் மல்லரையும் ⋆
உடைய விட்டோசை கேட்டான் ⋆
இருள் அகற்றும் எறி கதிரோன் ⋆

மண்டலத்தூடேற்றி வைத்தேணி வாங்கி ⋆
அருள் கொடுத்திட்டடியவரை ⋆
ஆட்கொள்வான் அமரும் ஊர் அணி அரங்கமே ‖ **4.9.3** ‖

பதினாறாம் ஆயிரவர் ⋆
தேவிமார் பணிசெய்ய ⋆
துவரை என்னும் அதில் நாயகர் ஆகி வீற்றிருந்த ⋆
மணவாளர் மன்னு கோயில் ⋆
புது நாண் மலர்க் கமலம் ⋆
எம் பெருமான் பொன் வயிற்றில் பூவே போல்வான் ⋆
பொது நாயகம் பாவித்திறுமாந்து ⋆
பொன் சாய்க்கும் புனல் அரங்கமே ‖ **4.9.4** ‖

ஆமையாய்க் கங்கையாய் ⋆
ஆழ் கடலாய் அவனியாய் அரு வரைகளாய் ⋆
நான்முகனாய் நான்மறையாய் ⋆
வேள்வியாய்த் தக்கணையாய்த் தானும் ஆனான் ⋆
சேமம் உடை நாரதனார் ⋆
சென்று சென்று துதித்திறைஞ்சக் கிடந்தான் கோயில் ⋆
பூ மருவிப் புள் இனங்கள் ⋆
புள் அரையன் புகழ் குழறும் புனல் அரங்கமே ‖ **4.9.5** ‖

மைத்துனன்மார் காதலியை மயிர் முடிப்பித்து ⋆
அவர்களையே மன்னர் ஆக்கி ⋆
உத்தரை தன் சிறுவனையும் உய்யக்கொண்ட ⋆
உயிராளன் உறையும் கோயில் ⋆
பத்தர்களும் பகவர்களும் ⋆
பழ மொழி வாய் முனிவர்களும் பரந்த நாடும் ⋆

சித்தர்களும் தொழுதிறைஞ்சத் ⋆
திசை விளக்காய் நிற்கின்ற திருவரங்கமே ‖ **4.9.6** ‖

குறட் பிரமசாரியாய் ⋆
மா வலியைக் குறும்பதக்கி அரசுவாங்கி ⋆
இறைப் பொழுதில் பாதாளம் கலவிருக்கை ⋆
கொடுத்துகந்த எம்மான் கோயில் ⋆
எறிப்புடைய மணிவரை மேல் ⋆
இள ஞாயிறெழுந்தாற் போல் அரவணையின் வாய் ⋆
சிறப்புடைய பணங்கள் மிசைச் ⋆
செழு மணிகள் விட்டெறிக்கும் திருவரங்கமே ‖ **4.9.7** ‖

உரம் பற்றி இரணியனை ⋆
உகிர் நுதியால் ஒள்ளிய மார் புறைக்க ஊன்றி ⋆
சிரம் பற்றி முடி இடியக் கண் பிதுங்க ⋆
வாய் அலறத் தெழித்தான் கோயில் ⋆
உரம் பெற்ற மலர்க் கமலம் ⋆
உலகளந்த சேவடி போல் உயர்ந்து காட்ட ⋆
வரம்புற்ற கதிர்ச் செந்நெல் ⋆
தாள் சாய்த்துத் தலை வணக்கும் தண் அரங்கமே ‖ **4.9.8** ‖

தேவுடைய மீனமாய் ஆமையாய் ⋆
ஏனமாய் அரியாய்க் குறளாய் ⋆
மூ உருவில் இராமனாய்க் ⋆
கண்ணனாய்க் கற்கியாய் முடிப்பான் கோயில் ⋆
சேவலொடு பெடை அன்னம் ⋆
செங்கமல மலர் ஏறி ஊசல் ஆடி ⋆

பூ அணைமேல் துதைந்தெழு ⋆
செம் பொடி ஆடி விளையாடும் புனல் அரங்கமே ॥ **4.9.9** ॥

செரு ஆளும் புள் ஆளன் மண் ஆளன் ⋆
செருச் செய்யும் நாந்தகம் என்னும் ஒரு வாளன் ⋆
மறை ஆளன் ஓடாத படை ஆளன் ⋆
விழுக்கை ஆளன் ⋆
இரவாளன் பகல் ஆளன் என்னை ஆளன் ⋆
ஏழுலகப் பெரும் புரவாளன் ⋆
திரு ஆளன் இனிதாகத் ⋆
திருக்கண்கள் வளர்கின்ற திருவரங்கமே ॥ **4.9.10** ॥

‡ கைந்நாகத்திடர் கடிந்த ⋆
கனல் ஆழிப் படை உடையான் கருதும் கோயில் ⋆
தென்னாடும் வடநாடும் தொழநின்ற ⋆
திருவரங்கம் திருப் பதியின் மேல் ⋆
மெய்ந்நாவன் மெய் அடியான் ⋆
விட்டுசித்தன் விரித்த தமிழ் உரைக்க வல்லார் ⋆
எஞ்ஞான்றும் எம்பெருமான் இணை அடிக்கீழ் ⋆
இணை பிரியாதிருப்பர் தாமே ॥ **4.9.11** ॥

அடிவரவு — மரவடியை தன்னடியார் கருள் பதினாறு ஆமையாய்
மைத்துனன்மார் குறள் உரம் தேவு செரு கைந்நாகத்து துப்பு

மரவடியை முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்